DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.346/2019

PROSECUTION WITNESS L.W.4/P.W.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | தகப்பனார் பெயர் | ராஜூ |
| கிராமம் | சத்தியமங்கலம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | பைனான்ஸ் | வயது | |

**(1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 24.09.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சத்தியமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். பைனான்சில் வேலை செய்து வருகிறேன்.

2) இறந்து போன ரசீத்தை தெரியுமா என்றால் தெரியும். 1,2 எதிரிகளை தெரியுமா என்றால் தெரியாது. சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஈரோடு, வ.உ.சி பூங்காவில் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு விளையாடுவதற்காக நானும், எனது நண்பர்கள் பாலமுரளி, சந்துரு, பாஸ்கர் மற்றும் இரசீத் ஆகியோர்கள் வந்திருந்தோம். வ.உ.சி பூங்காவில் உள்ள நீச்சல் குளத்திற்கு நானும் எனது நண்பர்களும் குளிக்கச் சென்றிருந்தோம். அப்போது இரசீத் எங்கிருந்தார் என்பது தெரியவில்லை. நாங்கள் குளித்துவிட்டு வந்த பிறகு தான் அங்கிருந்தவர்கள் யாரோ நீச்சல் குளத்திற்குள் மூழ்கி இருப்பதாக கூறினார்கள். அங்கு சென்று பார்த்தபோது, இரசீத் இறந்திருந்தார். பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள ஒரு மருத்துவமனைக்கு இரசீத்தை வண்டியில் கூட்டிச் சென்றோம். அங்கு போலீசார் எங்களை மருத்துவமனைக்குள் அனுமதிக்கவில்லை. பிறகு இரசீத் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில்**

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.09.24 18:26:12 +0500

**செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

**1.** 1) கடந்த 30.03.2006 ம் தேதி, காலை 8.00 மணிக்கு நானும், இறந்துபோன ரசீத், சந்துரு, ரவிவர்மன், பாஸ்கரன், பாபு ஆகியோரும் சத்தியமங்கலத்திலிருந்து புறப்பட்டு வ.உ.சி பூங்கா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வந்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் ஆமாம். பின்பு விளையாட்டு போட்டிகளில் கலந்து விளையாடி விட்டு, மதியம் 3.00 மணியளவில் வ.உ.சி பூங்கா விளையாட்டு மைதானத்தில் உள்ள நீச்சல் குளத்தில் குளிப்பதற்காக மேற்சொன்ன நண்பர்களுடன், நானும் டிக்கெட் வாங்கிக் கொண்டு குளிக்க சென்றேனா என்றால் சென்றோம். நீச்சல் தெரியாத இறந்து போன ரசீத்தும் , பாபுவும் சென்று டிக்கெட் வாங்கிக் கொண்டு நீச்சல் குளத்தில் இறங்கினார்களா என்றால் நான் பார்க்கவில்லை. பின்னிட்டு நானும், எனது நண்பர்களும் குளித்துவிட்டு மேலே வந்து துணி மாற்றிக் கொண்டு இருந்தபோது, ரசீத்தும், பாபுவும் நீச்சல் குளத்தில் இருந்தார்களா என்றால் அவர்கள் இருந்ததை நான் பார்க்கவில்லை. சிறிது நேரம் கழித்து ஆழமான பகுதிக்கு சென்ற இரசீத் மேலே வரவில்லை என்று பாபு சொன்னதால் நாங்கள் ஓடிச் சென்று இரசீத்தை வெளியே எடுத்து வந்தோமா என்றால் பாபு கூறவில்லை தகவல் கேள்விபட்டு சென்றேன். எதிரி ஆனந்தகுமார், மற்றும் நீர் காப்பாளர் எதிரி வெங்கடேஷ் மற்றும் ராஜகோபால் தங்களது பணிகளை சரிவர செய்யாமல் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இருந்ததால் தான் இரசீத்துக்கு இறப்பு ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு, நான் எதையும் பார்க்கவில்லை என்று மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

**இல்லை.**

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.09.24 18:26:18 +0500

Judicial Magistrate No.I,

Erode.